## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

## CC. No. 61 /2020

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7–ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 8 )**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகமதுநிவாஸ் | தொழில் | | **உதவி ஆய்வாளர்** |
| த/பெ. | : | **காஜாஉசேன்** | **ஊர்** | | நடுக்காவேரி |
| வயது | : | 29/26 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

07.04.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

**1) நான் தற்போது நடுக்காவேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளை எனக்கு தெரியும். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.**

2) கடந்த 30.08.2018 –ம் தேதி நடுக்காவேரி காவல் நிலைய ஆய்வாளராக திரு.ஜெகதீசன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட காவல் நிலைய குற்ற எண்.160/2018 ச/பி. 304(ஏ) இதச கீழான வழக்கு கோப்பை அவர் தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 6 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஸ்வநாதன், விஜய் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செயது சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 12 மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியோரிடம் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) திருவையாறு அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைத்து இறந்த நபர்களின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணையை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் செய்து பிரேத விசாரணை அறிக்கைகள் தயார்

செய்துள்ளார் **(இளையராஜா மற்றும் ஸ்டாலின் ஆகியோரின் பிரேத விசாரணை அறிக்கைகள் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. விபத்தில் இறந்த நபர்களின் சடலங்களை பிணக்கூராய்வு செய்வதற்காக திருவையாறு அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பியுள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 51M 2881டிவிஎஸ் ஸ்டார்ஸ்போர்ட்ஸ் இருசக்கர வாகனம் மற்றும் TN01N4019 என்ற எண் கொண்ட அரசு பேருந்து ஆகியவற்றை ஆய்வு செய்து அறிக்கை பெற வேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்துள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சுந்தர்ராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றுள்ளார். (TN 51M 2881டிவிஎஸ் ஸ்டார்ஸ்போர்ட்ஸ் இருசக்கர வாகனம் மற்றும் TN01N4019 என்ற எண் கொண்ட அரசு பேருந்து ஆகியவற்றின் மோட்டார் வாகன **ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. சம்பவம் உண்மையன தெரியவந்து, எதிரியை தேடி வந்த நிலையில், கடுவெளி அரசு போக்குவரத்துக்கழகம் எதிரே டீக்கடை முன்பு வைத்து இவ்வழக்கின் எதிரி நாகராஜ் என்பவரை காரணம் கூறி கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளார். இவ்வழக்கில் இறந்துபோன நபர்களுக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.ராகவேந்திரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரரேத பரிசோதனை அறிக்கைகள் பெற்றுள்ளார். **(இளையராஜா மற்றும் ஸ்டாலின் ஆகியோரின் பிரேத பரிசோதனை அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ. 11–ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 02.08.2019 ல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) சம்பவம் நடந்ததிலிருந்து நான்கரை மணிநேரம் காலதாமதாக தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு 20 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன இளையராஜாவின் மனைவி மற்றும் உறவினர் பற்றி விசாரித்துவழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளாரா என்றால் இல்லை. விபத்தில் இறந்துபோன ஸ்டாலின் ஓட்டிசென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN 51M 2881டிவிஎஸ் ஸ்டார்ஸ்போர்ட்ஸ். அவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று

விசாரித்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) அந்த இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்று புலன்விசாரணை அதிகாரி விசாரித்து அறிக்கையில் ஏதேனும் குறிப்பிட்டுள்ளாரா என்றால் புகாரில் எங்களுக்கு சொந்தமானது என்று புகார்தாரர் சொல்லியுள்ளார். புலன்விசாரணை அதிகாரி அதன் RC புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் RC புத்தகம் இல்லை என மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. RC புத்தகம் இல்லாத நிலையில் வண்டி யாருக்கு சொந்தம் என்று புலன்விசாரணை அதிகாரி விசாரித்து அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் டடைன்டு என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அந்த வாகனம் தற்போது எங்கு உள்ளது என்றால் டடைன்டு என்று குறிப்பிடப்பட்டால் நிலையத்தில்தான் இருக்கும். வாகனத்திற்கு யாரும் உரிமை கோரவில்லைஎன்றால் அதுபற்றி கோப்பில் இல்லை.

3) விபத்தில் இறந்துபோனவர்கள் தலைகவசம் அணியவில்லை என்பது குறித்து புலன்விசாரணை அதிகாரி விசாரித்து அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பேருந்தில் பயணம் செய்த பயணிகள் யாரையுமோ, பேருந்து நடத்துனரையோ விசாரணை செய்து புலன்விசாரணை அதிகாரி சாட்சி பட்டியலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் MRM மில் எதிரே என்றால் சரியல்ல, டாடா மோட்டார்ஸ் எதிரே. டாடா மோட்டார்ஸ் அருகே கோவை பேக்கரி ஸ்டால் உள்ளதா என்றால் அது தற்போது வந்தது. டாடா மோட்டார்ஸ் அருகே சம்பவ சமயத்தில் டீக்கடை இருந்தது என்றால் தெரியாது. MRM மில் மற்றும் டாடா மோட்டார்ஸ்க்கு இடையே 50 அடி தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, 50 மீட்டர் இருக்கும்.

4) MRM மில்லுக்கு எதிரே டீக்கடையுடன் சேர்ந்தார்போல் 4 வீடுகள் உள்ளதா என்றால் மாதிரிவரைபடத்தில் குறிப்பிடவில்லை. டாடா மோட்டார்ஸ்சில் பணிபுரியும் நபர்களையோ, அங்கு இருந்த செக்யூரிட்டியையோ விசாரணை செய்து புலன்விசாரணை அதிகாரி சாட்சி பட்டியலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த நேரத்தில் எதிரி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் எந்த கிளையில் பணியில் இருந்தாரா என்பதை அறிய அதன் மேலாளரை விசாரணை செய்து புலன்விசாரணை அதிகாரி சாட்சி பட்டியலில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரணை செய்துள்ளார்.

5) எதிரியை கைது செய்ததாக சொல்லும் ஆனந்த் டீக்கடை எப்போதும் கூட்டமாக இருக்கும் என்றும் அங்கு இருந்த நபர்கள் யாரையும் விசாரணை செய்து புலன்விசாரணை அதிகாரி சாட்சி பட்டியலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமான டாடா மோட்டார்ஸ் அருகே டீக்கடை மற்றும் உணவு விடுதி சம்பவ சமயத்தில் இருந்தது என்றும் அதை புலன் விசாரணை அதிகாரி மாதிரிவரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சம்பவ சமயத்தில் இருந்ததா என்று மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் யாரோ ஒருவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை எடுத்துவந்து அதிவேகமாக வாகனத்தை ஓட்டி பயணிகள் செல்லும் பேருந்தின்மீது மோதி இவ்வழக்கில் இறந்துபோன ஸ்டாலின் விபத்தை தானாக வரவழைத்துக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.

6) 10.30 மணி நேரம் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்று சொன்னால் சரிதான். சாட்சிகள் ரமேஷ் மற்றும் வர்ணன் இறந்துபோன ஸ்டாலினின் உறவினர்கள் என்றால் ஊரைச்சேர்ந்தவர்கள். சாட்சி அலெக்சாண்டர் , விஸ்வநாதன் மற்றும் ஆகியோர் ஸ்டாலின் தெருவை சேர்ந்தவர்கள். மேற்படி சாட்சிகளை தவிர தனிநபர் சாட்சிகள் யாரையும் புலன்விசாரணை அதிகாரியால் விசாரித்து சாட்சிபட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல, குமார் , சதீஷ்பிரபு, ஸ்டாலின் ஆகியோரை விசாரணை செய்துள்ளார். அவர்களும் ஸ்டாலின் தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று புலன்விசாரணை அதிகாரி விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் அது பற்றி வழக்கு கோப்பில் இல்லை.

7) வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் , சொன்ன இடத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உரிய புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் மாடர்ன் ரைஸ்மில் உள்ளது என்றும் அரிசி நெல் ஏற்றுவதற்கு நீண்ட வரிசையில் லாரிகள் நின்றுகொண்டிருக்கும் என்று சொன்னால் அது குறித்து வழக்கு கோப்பில் சொல்லப்படவில்லை. எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி பயணிகள் பேருந்து ஓட்டுவதில்

சிறப்பு பயிற்சி பெற்றவர் என்றும் எதிரியின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.